2023 மார்ச் 23]

7. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *6–4–2023 (வியாழக்கிழமை) அன்று காலை விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 41–வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகியன 10–4–2023 (திங்கட்கிழமை) அன்று காலை எடுத்துக்கொள்ளப்பெறும்.*

10–4–2023 (திங்கட்கிழமை) அன்று காலை விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 27–தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) மற்றும் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை ஆகியன 6–4–2023 (வியாழக்கிழமை) அன்று காலை எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதை பேரவையின் ஒப்புதலுடன் அறிவிக்கிறேன்.

8. வரவு—செலவுத் திட்டம் மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2023—2024, பொது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 2023–2024 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின்மீது பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள். இன்று மாண்புமிகு உறுப்பினர்கள் மொத்தம் 8 பேர் பேசவிருக்கிறார்கள். முதல் 2 உறுப்பினர்கள் 10 நிமிடங்களும், எஞ்சியவர்கள் தலா 5 நிமிடங்களும் இந்த விவாதத்தில் பேசவிருக்கின்றீர்கள். விவாதத்தில் பேச வருகிற அனைவருமே நிதிநிலை அறிக்கை, வேளாண்மை நிதிநிலை அறிக்கை, இரண்டையும் சேர்த்தே பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள். நேரம் சரியாக 12 மணி 8 நிமிடங்கள். 12 மணி 18 நிமிடங்களுக்குள் முடிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள். இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் இருக்கிறாரா? (குறுக்கீடு)*